www.Padasalai.Net www.CBSEtips.in

8

Register No. ______

# காலாண்டுத் தேர்வு – 2023

## தமிழ்

மணி : 2.30 மதிப்பெண்கள் : 100

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 10 x 1 = 10

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல்............
   அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி
2. 'ஐம்பால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது............
   அ) ஐம் + பால் ஆ) ஐந்து + பால் இ) ஐம்பது + பால் ஈ) ஐ + பால்
3. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர்...........
   அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) வ.உ.சி ஈ) பெருஞ்சித்திரனார்
4. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள்.........
   அ) இ, ஈ ஆ) உ, ஊ இ) எ, ஏ ஈ) அ, ஆ
5. செவ்விந்தியர்கள் நிலத்தைத்..........மதிக்கின்றனர்.
   அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக
6. பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல்.........
   அ) செல்க ஆ) ஓடு இ) வாழ்க ஈ) வாழிய
7. உடல்எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று.
   அ) தலைவலி ஆ) காய்ச்சல் இ) புற்றுநோய் ஈ) இரத்தக்கொதிப்பு
8. முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல்.........எனப்படும்.
   அ) முற்று ஆ) எச்சம் இ) முற்றெச்சம் ஈ) வினையெச்சம்
9. கற்றவருக்கு அழகு தருவது.............அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி
10. கல்விப் பயிற்சிக்குரிய பருவம்.........அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை

**ஆ) பொருத்துக.** 4 x 1 = 4

11. நடந்து – முற்றெச்சம்
12. பேசிய – குறிப்புப் பெயரெச்சம்
13. எடுத்தனன் உண்டான் – பெயரெச்சம்
14. பெரிய – வினையெச்சம்

**II. எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 6 x 2 = 12

15. நோயின் மூன்று வகைகள் யாவை?
16. நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவை?
17. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
18. உலகம் எவற்றால் ஆனது?
19. ஓவிய எழுத்து என்றால் என்ன?
20. புயல்காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?
21. நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?
22. யாருக்கு அழகு செய்ய அணிகலன்கள் தேவையில்லை?
23. திரு.வி.க சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.

**III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.** 4 x 4 = 16

24. புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய வழிமுறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com
CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in

25. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?
26. நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.
27. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?
28. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.
29. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

**IV. அடிபிறழாமல் எழுதுக.** 4 + 2 = 6

30. "வாழ்க நிரந்தரம்" எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்துப் பாடலை எழுதுக.
31. "தன் குற்றம்" – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**V. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 3 x 2 = 6

32. ஒரு சொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக.

அ) படி

ஆ) திங்கள்

இ) ஆறு

33. **சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 2 x 1 = 2

அ) பூ............(கொய்/பறி)

ஆ) பால்..............(குடி/பருகு)

34. **தொடர்களை மாற்றுக** 2 x 2 = 4

1. காட்டில் புலி நடமாட்டம் உள்ளது. (வினாத்தொடராக மாற்றுக)
2. அந்தோ ! பூனையின் காலில் அடிபட்டுவிட்டதே ! (செய்தித் தொடராக மாற்று)

35. **உவமைத் தொடர்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.** 2 x 2 = 4

1. உடலும் உயிரும் போல
2. வேலியே பயிரை மேய்ந்தது போல

36. வினைமுற்றுக்கு உரிய வேர்ச் சொல்லை எழுதுக. அ) ஓணான் ஆ) வருக 2 x 1 = 2

**VI. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.** 5 x 2 = 10

37. மெய்யெழுத்துக்கள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?
38. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
39. ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?
40. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
41. "அழகிய மரம்" – எச்ச வகையை விளக்குக.
42. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?
43. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?

**VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 3 x 8 = 24

44. எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.

**(அல்லது)**

தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45. மூளையின் வலது, இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

'வெட்டுக்கிளியும் சருகுமானும்', கதையைச் சுருக்கி எழுதுக.

46. "நான் விரும்பும் கவிஞர்" என்னும் தலைப்பில் ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

CamScanner